ஒடிசா மாநிலத்தில் உள்ள ஸ்ரீ ஸ்ரீ பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கத்தார் நாட்டின் தோகா வங்கி சீஇஒ சீதாராமனுக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நந்தலால் பிஎச்டி பட்டம் வழங்கினார். உடன் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் தலைவர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி.

'பசுமை வங்கி' திட்டம் செயல்படுத்துங்க!

'பிஎச்டி' பட்டம் பெற்ற சீதாராமன் வலியுறுத்தல்

ஒவ்வொரு வங்கியும் பெருநகரங்களில் குறைந்தபட்சம் 10 சதவீதம் பசுமை வங்கி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கத்தார் நாட்டின் தோகா வங்கி சீஇஒ சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

சமீபத்தில் ஒடிசா மாநிலத்தில் உள்ள ஸ்ரீ ஸ்ரீ பல்கலைக்கழகத்தில் கிரீன் பேங்கிங் அன் சஸ்டெயினபிலிட்டி (பசுமை வங்கி மற்றும் நிலையாண்மை) குறித்து ஆய்வறிக்கையை சீதாராமன் சமர்பித்து இருந்தார். கடந்த ஆகஸ்ட் 16ம் தேதி ஆய்வறிக்கை பற்றி பேச சீதாராமன் அழைக்கப்பட்டார். ஆய்வறிக்கையை ஆய்வு செய்த குழுவினர் சீதாராமனுக்கு 'பிஎச்டி' வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்தனர். இந்நிலையில் ஸ்ரீ ஸ்ரீ பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடந்த பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நந்தலால், சீதாராமனுக்கு பிஎச்டி பட்டம் வழங்கினார்.

விழாவில் சீதாராமன் பேசியதாவது: உலகளாவிய நிதி நெருக்கடி சூழ்நிலையில் பசுமை வங்கி மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. பசுமை வங்கி, சுற்றுச்சூழலை பேணிகாக்கும் நடைமுறையை ஊக்குவிக்கிறது. சர்வதேச அளவில் நீடித்த வளர்ச்சி ஏற்பட பசுமை பொருளாதாரம் ஒரு தீர்வாக இருக்கும். எனவே பசுமை பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நடைமுறையில் பசுமை வங்கி உள்ளது. அதன் மூலம் கால நிலை மாற்றத்தை தணிப்பதற்கு வழி செய்யலாம். சமூகத்தில் பொறுப்புள்ள குடிமக்கள் சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், நிலையான வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டும். ஒவ்வொரு வங்கியும் பெருநகரங்களில் குறைந்தபட்சம் 10 சதவீதம் பசுமை வங்கி அல்லது சுத்தமான மேம்பாட்டு வழிமுறை அல்லது நிலையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் வங்கிகள் பங்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.